**சார்பு நீதிமன்றம், துறையூர்.**

**முன்னிலை .. திரு. C.விஜய் கார்த்திக், M.A,M.L.,**

**சார்பு நீதிபதி,**

**துறையூர்.**

**2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ம் நாள் திங்கள்கிழமை**

**அசல் வழக்கு எண்.68/2025**

**CNRNo.TNTP150004052025**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், ஆங்கியம், உடையார் தெரு, கதவு எண்.2/81 என்ற முகவரியில் வசிக்கும் கருப்பழகி அவர்களின் மகன் சுமார் 68 வயதுள்ள K.நயினார். ...வாதி.

**/எதிர்/**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் , நொச்சியம், கோபால்தாஸ் கார்டன், கதவு எண்.7/3623 என்ற முகவரியில் வசிக்கும் கண்ணன் அவர்களின் மகன் சுமார் 48 வயதுள்ள K.முரளிதரன். ...பிரதிவாதி.

வாதியிடம் பிரதிவாதி கடனுறுதிச்சீட்டின் பேரில் பெற்ற அசல் கடன் தொகை ரூ.2,50,000.00/-த்திற்கு தற்போதைய வழக்குரை தொகை ரூ.3,38,500.00/-ம், உரிய வட்டியும், பின்வட்டி கோரியும், செலவுத்தொகை கோரியும், வாதியால் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 1-ன் கீழ் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு 11.07.2025-ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு அன்றே கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

தாவா மதிப்பு ரூ.3,38,500/-

அசல் தொகை ரூ.2,50,000/-

கடந்த 21.01.2024 தேதி முதல் 10.07.2025 தேதி வரையிலான மாதம் ரூ.2/- வட்டி வீதம் ரூ.88,500/-

இதற்கு நீதிமன்ற முத்திரை கட்டணமாக ரூ.10,155/- தமிழ்நாடு முத்திரை கட்டணச்சட்டம் 14/55 பிரிவு 22 -ன் கீழ் செலுத்தப்பட்டுள்ளது.

**வழக்குமூலம் ..** 21.01.2024, 02.06.2025, 04.06.2025 ஆகிய தேதிகளில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், ஆங்கியம் கிராமத்தில் ஏற்பட்டுள்ளது.

இந்த வழக்கானது இறுதியாக 13.11.2025-ம் தேதி விசாரணைக்கு வந்தபோது, வாதிக்காக வழக்கறிஞர் திரு.S.தனசேகரன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதியை அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், வாதி தரப்பில் தாக்கல் செய்த எழுத்துமூல வாதுரையை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இம்மன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

## தீர்ப்பாணை

**1.** வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**2.** வாதிக்கு, பிரதிவாதி வழக்குரை தொகையாக ரூ.3,38,500.00/-ம், அசல் தொகை ரூ.2,50,000/-த்திற்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரை 9% வட்டியும், தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதி வரை 6% பின்வட்டியும் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

**3.** வாதிக்கு பிரதிவாதி வழக்கு செலவுத்தொகையாக ரூ.10,165/-ஐ செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

## செலவுத்தொகை பட்டியல்

| வ.எண். | விவரம் | வாதி தரப்பு | | பிரதிவாதி தரப்பு | |
|---|---|---|---|---|---|
| 1. | பிராதுக்கு நீதிமன்ற கட்டணம் | 10,155 | .00 | -- | -- |
| 2. | வக்காலத்து | 10 | .00 | -- | -- |
| மொத்தம் | | 10,165 | .00 | -- | -- |

2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 24-ம் நாள் இந்நீதிமன்ற முத்திரையும் கையொப்பமிட்டு கொடுக்கப்பட்டது.

/உண்மை நகல்/

(ஒம்)/- C.விஜய் கார்த்திக்,
சார்பு நீதிபதி,
துறையூர்.